பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஏடு: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 24 சனிக்கிழமை (08 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 254

## பிரேமாவுக்கு எதிரான இயக்கத்தைப் படம் எடுத்த

# வெளிநாட்டுச் செய்தியாளர் மீதும் கொழும்பில் குண்டர்கள் தாக்குதல்!

### மீண்டும் "குமாரி"

அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு "குமாரி" கப்பல் எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அரிசி, மா, சீனி போன்றவற்றுடன் ஒரு தொகை பரல் மண்ணெண்ணெய்யும் இந்தக் கப்பலில் ஏற்றி வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதத்தின் பின்னர் மீண்டும் இந்தக் கப்பல் சேவையில் ஈடுபடவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## காரைநகர் படையினர் நேற்று ஷெல், பீரங்கி தாக்கு!

காரைநகர் முகாமில் இருந்து நேற்றுக்காலை 7 மணியளவில் கண்டபடி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதேசமயம் கடற்பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

பொன்னாலை கரையோரப் பகுதிகளில் அனேக ஷெல்கள் விழுந்து வெடித்தன.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய உற்சவம் இடம்பெற்று வரும் இவ்வேளையில்—

இப்பகுதியை நோக்கி தாக்குதல்கள் எதனையும் நடத்த வேண்டாம் என்று ஆலய பரிபாலன சபையினர் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் காரைநகர் படையினரை கேட்டிருந்தபோதிலும் நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-28-15)

### இம்மாதம் முழுவதும்

## யாழ். மாவட்டத்தில் பரீட்சைகள் பல நடக்கும்

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ்ப்பாணத்தில் தற்போது ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சை நடைபெற்று வரும் அதே வேளை — இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் — மேலும் பல பரீட்சைகளை நடத்துவதற்கு யாழ். கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

அந்தப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்களும், அனுமதி அட்டைகளும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

நடைபெறவுள்ள பரீட்சைகளின் விவரம் வருமாறு:-

★ 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்பரீட்சைகள் இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறும். இதற்கான வினாத்தாள்களும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### எழுதுநர் போட்டிப்பரீட்சை:

## விண்ணப்ப முடிவு தினம் ஆகஸ்ட் 12 என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 8

எழுதுநர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை அனுப்பலாம் என்று அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அடுத்தவாரம் 'குமண' கப்பல் கொழும்பு திரும்பும் போது, விண்ணப்பப்பத்திரங்களை பரீட்சை ஆணையாளருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், 12 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

### வண்ணான்குள முகாம் தகர்ப்பு:

## வன்னிப பகுதியில் திங்கள் 'வெற்றிவிழா' நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஆக. 8

வவுனியா செட்டிகுளம் பகுதியில் வண்ணான்குள இராணுவ முகாமை தகர்த்தெறிந்த "வெற்றி விழா" நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை (10 ஆம் திகதி) வன்னிப் பகுதிகளில் நடைபெறவுள்ளன.

கடந்த மாதம் 10 ஆம் திகதி இந்த முகாம் தகர்க்கப்பட்டு, அங்கிருந்த 60க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர் என்பதும், 107 நவீன ஆயுதங்களும் மற்றும் இராணுவத் தளபாடங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன என்பதும் தெரிந்தவையே.

இந்த வெற்றி விழா நிகழ்ச்சிகள் கிளிநொச்சி கோட்டத்திலும் வவுனியா கோட்டத்திலும் நடைபெறும். இந்த நிகழ்ச்சிகளின்போது வண்ணான்குள தாக்குதல் சமயம் களப்பலியான ஏழு மாவீரர்களும் நினைவு கூர்ந்து கௌரவிக்கப்படுவர்.

கடந்த மாதம் வண்ணான்குள முகாம் தகர்ப்பு மாத்திரமன்றி, ஸ்ரீலங்காப் படையினரின் வை-8 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது மற்றும் பேரிடித் தாக்குதல்கள் பல இடம்பெற்றன என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. (ஒ)

## மக்கள் கூட்டத்தின் மத்தியில் பத்திரிகையாளர் மீது அராஜகம்

கொழும்பு, ஆகஸ்ட் 8

ஜனாதிபதி பிரேமதாஸா பதவி விலகக் கோரி நடத்தப்பட்ட கையெழுத்துச் சேகரிக்கும் இயக்கம் பற்றி செய்திகளைத் திரட்டச் சென்ற செய்தியாளர்களும், படப்பிடிப்பாளர்களும் நேற்று ஆயுதம் தாங்கிய கும்பலினால் தாக்கப்பட்டனர். இவ்வாறு தாக்கப்பட்டவர்களில் வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் காயமுற்றனர்.

கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்தின் முன்னால் வைத்தே வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டது குறித்து வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர் சங்கங்களும், சர்வதேசப் பத்திரிகையாளர் அமைப்புகளும் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில், ஜனாதிபதி பிரேமதாச மீது குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவரப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஒரு லட்சம் பொதுமக்களின் கையொப்பங்களைச் சேகரிக்கும் இயக்கத்தை நேற்று ஆரம்பித்தது.

நேற்றுப் பகல் நகர அலுவலகங்கள் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்த வேளை, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்கள் திரு. லலித் அத்துலத் முதலியும் மற்றும் பலரும் மக்களிடம் கையொப்பங்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி வீசிய பிரசுரங்கள்!

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் ஹெலியில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் அள்ளி அள்ளி வீசப்பட்டன. சில பகுதிகளில் இரவு வேளையிலும் கூட பிரசுரங்கள் போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சில பகுதிகளில் இருந்து பொதுமக்களை வெளியேறிச் செல்லுமாறு பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இடத்துக்கு இடம் போடப்பட்ட பிரசுரங்களில் குறிப்பிடப்பட்ட பகுதிகளும் மாறுபட்டு காணப்பட்டன.

## பரிசாரகர் பயிற்சி திடீர் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்று வந்த பரிசாரகர் பயிற்சி வகுப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சியே நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்குத் தெரிவானோரை இம்மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்புத் தலைமையகத்தில் இருந்து நேற்றுக் கிடைத்த அவசர பணிப்புரையைத் தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் நடந்த எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குப் பயிற்சி அளிக்குமாறு முன்னர் தலைமையகம் அறிவித்ததைத் தொடர்ந்தே 49 பேருக்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன; இப்போது திடீரென நேர்முகப் பரீட்சைக்கு அவர்களை கொழும்புக்கு அனுப்புமாறு கேட்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கு

## பாதுகாப்பு நிலை குறித்து ஆராய கொழும்பில் மாநாடு

வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நிலை குறித்து ஆராய விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனால் இந்த மாநாடு கூட்டப்படவுள்ளது.

கொள்ளுப்பிட்டி கிராமோதய மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள், வடக்கு-கிழக்கு மாகாண பாதுகாப்பு, சிவில் அதிகாரிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, சுகாதாரம், உணவு ஆகிய விடயங்கள் குறித்து மாநாட்டில் ஆராயப்படும் என்று திரு. வீரக்கோன் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வினாத்தாள்கள் நேற்று வந்தன

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கான 2ஆவது தொகுதி வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

பலாலிக்கு விமான மூலம் எடுத்து வரப்பட்ட வினாத்தாள்கள் 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு நேற்றுக்காலை எடுத்து வரப்பட்டு, அங்கு வைத்து கல்வி அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறும் பாடங்களுக்குரிய சகல வினாத்தாள்களும் வந்து சேர்ந்துவிட்டன.

## சுவிஸிலிருந்து ஈழ அகதிகளை திருப்பியனுப்புவது பற்றி ஆராய்வு!

### கொழும்பில் மூவர் குழு பிரமுகர்களுடன் பேச்சு

கொழும்பு, ஆக. 8

சுவிற்சர்லாந்தின் அகதிகளுக்கான சமஷ்டி அலுவலகத்தைச் சேர்ந்த — மூன்று பேர் கொண்ட — குழு ஒன்று கொழும்பில் அரச அதிகாரிகள், மேற்குநாடுகளின் ராஜதந்திரிகள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகளை சந்தித்துப் பேச்சுகள் நடத்தி வருகின்றது.

இந்தக் குழுவுக்கு திரு மார்செல் ஜே சக்ஸ்வேர்ட் தலைமை வகிக்கிறார்.

சுவிஸில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாகவே சுவிஸ் குழு பேச்சுகளை நடத்தி வருவதாகவும் —

இக்குழுவார முடிவில் சுவிஸ் திரும்பும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கைத் தமிழ் அகதிகளை மிகவிரைவில் திருப்பி அனுப்ப வேண்டும் என்றதனது

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தரைத் தாக்குதலுக்கு தேவையான நவீன ரக யுத்த விமானங்கள்

### வருட இறுதிக்குள் கிடைக்குமாம்

கொழும்பு, ஆக. 8

தரைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் Turbo-prop ரக போர் விமானங்களின் அணி ஒன்றை இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இலங்கை விமானப்படை வாங்கும்.

பாதுகாப்பு உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ஐலண்ட்' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

Turbo-prop ரகத்தைச் சேர்ந்த நான்கு வகையான விமானங்களில் எந்த வகையை வாங்குவது என்பது குறித்து விமானப் படையின் உயர்நிலை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் —

ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்க நாடுகளில் தயாரிக்கப்பட்ட விமானங்களே விமானப் படை உயர்நிலை அதிகாரிகளின் பரிசீலனையில் தற்போது உள்ளன என்றும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

வன நாடே வளநாடு
அது நிலைக்க வழிகோலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வல்வெட்டித்துறை

# ஆதி வைரவர் கோவில்

## 5ஆம் திருவிழா நிகழ்ச்சிகள்

ஆடிமாதம் 24 ஆம் திகதி (8 8-1992) சனிக்கிழமை

எம் பெருமானுக்கு விசேஷ அபிசேகமும்

அதனைத் தொடர்ந்து கீழ்க்காணும் நிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக நடைபெறும்.

மாலை 6-30 மணி தொடக்கம்
கம்பன்கழக அமைப்பாளர்

திரு. ஜெயராஜ் அவர்களின்

**அன்பே சிவம்**

எனும் விடயம் பற்றிய சிறப்புச் சொற்பொழிவும்
7-30 மணி தொடக்கம் கலாவிநோதன்

சின்னமணி கணபதிப்பிள்ளை அவர்களின்

**வில்லிசையும்** இடம்பெறும்.

தொடர்ந்து வைரவப் பெருமான் புதிதாக அமைக்கப் பெற்ற இடபவாகனத்தில் வீதிவலம் வந்தருளுவார்.

- 5ஆம் திருவிழா உபயகாரர்.

[22088]


# பொலன்னறுவை வரையே ரயில் சேவை நடக்கிறது

கடந்த மாதம் 21ஆம் திகதி மட்டக்களப்பு-கொழும்பு ரயில் சித்தாண்டியில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து மட்டக்களப்பு-கொழும்பு ரயில் சேவை இன்னமும் பொலன்னறுவை மட்டுமே நடைபெறுகிறது.

அந்தச் சம்பவத்தின் போது ஏழு பயணிகள் பலியானதும் ரயில் என்ஜின் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் தெரிந்தவையே.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பயணிகள் ரயில் மட்டக்களப்புக்குச் செல்ல கூட்டுப்படைத் தலைமையகம் இன்னும் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் மட்டக்களப்புப் பகுதியில் எரிபொருள்களுக்கும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதை அடுத்து அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சரக்கு ரயில் ஒன்று கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.


## அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல்

ஒவ்வொரு பிரிவு காரியாலயத்துக்கும் கிளைத் தலைமையகத்திலிருந்து 11-07-92 வரை அவ் அவ் பிரிவுகளில் அங்கத்துவ பணம் (1992 ஆம் ஆண்டிற்கான) செலுத்தியோரது அங்கத்துவ பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே அங்கத்தவர்கள் அனைவரும் மேற்படி பட்டியலில் தங்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி பெயர்கள் அங்கத்துவ பட்டியலில் இடம்பெறாவிடின் 14-08-92 பிற்பகல் 4.00 மணிக்கு முன்பாக எம்முடன் கிளை தலைமையகத்தில் தொடர்புகொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

14-08-92 பிற்பகல் 4.00 மணிக்கு எம்மால் உறுதிப்படுத்தப்படும் அங்கத்துவ பட்டியலே நடைபெற இருக்கும் பிரிவு, கிளை தேர்தலுக்கான பட்டியலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
07-08-92

ஏ. சி. செபநாயகம்
தலைவர்
(இடைக்காலம்)

[சி/3029]



கொக்குவில் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சபை

## பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்

ஆசிரியர்களுக்கான கூட்டம் முற்பகல் 10-00 மணி
பெற்றோர்களுக்கான கூட்டம் பிற்பகல் 3-00 மணி

காலம்: 12 — 08 — 92 புதன்கிழமை

தயவுசெய்து எல்லா ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் சமுகம்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
[சி/3028]

இ. மகேந்திரன்
அதிபர்


## 16 ஆம் நாள் நினைவு



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 12 | 24 |
| 08 | 07 |
| 1934 | 1992 |

**செல்வி நல்லநாயகியம்மை**

[ஓய்வுபெற்ற ஆசிரியை யா/ யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்]

"விட்டுப் பிரிந்தோடி விண்ணோடு சென்றனையே
கொட்டும்நீர் கண்கள் குளமாந்து"

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்

செல்வி சே. ஆதீ
(பெறாமகள்),
(யாழ். பல்கலைக் கழக கலைப் பீட 1 ஆம் வருடம்)
பாலு. சிவம், ஜெயம்,
(சகோதரர்)
மற்றும் குடும்பத்தினர்.

கரவெட்டி கிழக்கு.

[22091]


யா/நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை
(மங்கையர்க்கரசி வித்தியாசாலை)
பழைய மாணவர் சங்கம்

## பொதுக் கூட்டம்

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 09-08-1992 ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி

இப் பாடசாலையில் படித்த பழைய மாணவ. மாணவியர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி தங்களை அங்கத்தவராக பதிவு செய்து கொள்ளவும்.

— செயற்குழு.

[22073]



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94

சனி | 1 — 2 முடிவுக் கணக்கு
ஞாயிறு | 4 — 5 தொங்கல் கணக்கு

## A/L 93

சனி | 2 — 3 முடிவுக் கணக்கு
ஞாயிறு | 3 — 4 மாற்றுண்டியல் கணக்கு

**S. K. பிரபாகரன் B. B. A.**

ஆரம்பம்: 09 - 08 - 1992

குறிப்பு:

★ விடுமுறை கால விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன.
★ ஒவ்வொரு பாட அலகு முடிவுறும் போது கடந்த கால வினாக்கள் செய்யப்படும்.
★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும்.

(சி-3121)


## அந்தியேட்டி அழைப்பு



**திருமதி இராஜேஸ்வரி சந்திரசேகரம்பிள்ளை**

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 08-11-1926 | 10-07-1992 |

அன்னாரது அந்தியேட்டிக்கிரியை 09-08-1992 ஞாயிறு காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

- குடும்பத்தினர்.

நவிண்டில்,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(22082)


# பாரதிதாசன்

கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

**G. A. Q; 1st in Com.**

1992 Sep. Oct. பரீட்சைக்குரிய
மீட்டல் மாதிரி வினா - விடை வகுப்பு

★ பொருளியல் ★
S. வரதராஜன்
B. A. (Hons)

ஆரம்பம்: 10 - 08 - 1992 திங்கள்

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.

பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப் படிப்பு

**B. A. வகுப்புகள்**

★ பொருளியல் ★
S. வரதராஜன்
B. A. (Hons)

ஆரம்பம்: 08 - 08 - 1992 சனி

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-3110)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**தம்பிப்பிள்ளை வீரசிங்கம்**

| தாயின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 14-09-1916 | 10-07-1992 |

எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தந்தையின் ஆத்ம சாந்திக்காக நாம் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (09-08-1992) நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய வைபவங்களிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அரசடி றோட்,
இருபாலை கிழக்கு,
இருபாலை.

[22086]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கரடியனாறு தாக்குதலை அடுத்து

# வயலில் கைதானோரில் 18 பேரின் கதி என்ன?

கொழும்பு, ஆக. 8

மட்டக்களப்பு மாவட்டம் கரடியனாறில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் படையினரால் கூட்டிச் செல்லப்பட்ட 26 பேரில் 18 பேரின் நிலைமை தெரியவில்லை.

எஞ்சிய எட்டுப் பேரில் இருவர் சிறு காயங்களுடன் தப்பி வந்துள்ளனர். ஆறுபேர் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு அரசினர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கரடியனாறில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் பின்னர் படையினர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு இந்த 26பேரையும் கூட்டிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் நடத்திய தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

வயலில் வேளாண்மை செய்து கொண்டிருந்த மகிழவெட்டுவானைச் சேர்ந்தோரே கைதான 26 பேரும் ஆவர். [இ]

## கொழும்பில் 2 தினங்களில் 200 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஆக. 8

கொழும்பில் கடந்த புதன்—வியாழக்கிழமைகளில் பொலிஸார் நடத்திய தேடுதல்களின்போது 200 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்.

கொழும்பு நகருக்குள் புலிகள் ஊடுருவி இருப்பதாக தெரிவிக்கப்பட்ட தகவல்களை அடுத்தே இந்த சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

கைதானோரில் பெரும்பாலானோர் விடுதிகளில் தங்கி இருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வியாழக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட தேடுதல்களில் மட்டும் வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி, பாமன்கடை ஆகிய பகுதிகளில் 150 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் —

அதற்கு முதல் நாள் தெமட்ட கொடையில் 49 பேர் கைதாகினர் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொரள்ளை வை. எம். சீ. ஏயில் தங்கியிருந்தோரிலும் நால்வர் கைதாகி உள்ளனர். (இ-எ)

## கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவர் பரீட்சை

கொழும்பு, ஆக. 8

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் இருந்து இடம் பெயர்ந்த கலைமாணி மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் திங்கள். செவ்வாய் ஆகிய தினங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கலைமாணித் தேர்வு ஒன்று பரீட்சை திங்கட்கிழமையும், கலைமாணித் தேர்வு இரண்டு பரீட்சை செவ்வாய்க்கிழமையும் நடைபெறும். [இ-எ]

## வதந்தி பரப்புவோர்மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, ஆக. 8

வதந்தி பரப்புவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸா உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்படுவதாக பொய்யான வதந்திகளைப் பரப்பி வரும் தீய சக்திகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி தனது செயலாளரை ஜனாதிபதி பணித்திருக்கிறார். (இ-எ)


A/L MATHS

திரு. குணசிங்கம்

B sc. (Hons)

Personal

New Science Centre

Jaffna

(C/3119)



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,

யாழ். கல்விக்கோட்டம்.

பொதுச்சபைக் கூட்டம்

10-08-1992 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தில் (எழிலகம் முன்பாக) பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. விடுமுறை கால வகுப்புகள் பற்றியும், முக்கிய சில விடயங்கள் பற்றியும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்படவுள்ளது. எனவே கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தவறாது கலந்துகொள்ளுமாறு அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ். கல்விக்கோட்டம்.

(சி-3124)



உ

சாவகச்சேரி - மீசாலை

அருள்மிகு பன்றிக்கேணி கந்தசாமி கோவில்

சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

09-08-1992 ஞாயிறு

காலை 7 மணி தொடக்கம்

சித்திரத்தேர் நிர்மாணித்தவர்

இளம் சிற்பக்கலைஞர்

திரு ஜெயம் விஸ்வலிங்கம்

நீர்வேலி.

விழா நிகழ்ச்சி:

தொடக்கவுரை: சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்

தலைவர்: பண்டிதர் திரு. க. சங்கரப்பிள்ளை

அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

ஆசியுரை: சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் (நீர்வேலி)

வாழ்த்துரை: மறைதிரு ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள்

பாராட்டுரை: சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் (சுன்னாகம்)

திரு. க. சங்கரப்பிள்ளை,

(பரிபாலனசபை சார்பாக)

(22029)



Practice Makes One Perfect

O/L 92

விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், வர்த்தகம், ஆகிய பாடங்களுக்கான பகுதி 1 + பகுதி 11

பயிற்சிப் பரீட்சைகள்

3 ஆவது பரீட்சை:

16-08-1992

ஒவ்வொரு மாதத்தின் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நிறுவனங்களில் நடத்தப்படும். இந்நிறுவனங்களில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பயிற்சிப் பரீட்சைகளில் பங்கேற்கலாம்.

★ Bond — யாழ்ப்பாணம்
★ Selin — இருபாலை
★ Pearl — நீர்வேலி
★ Kugan — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
★ Vinyls — சுன்னாகம்
★ National — பண்டத்தரிப்பு
★ Vinayahar — மானிப்பாய்
★ Y. M. C. A. — பருத்தித்துறை
★ Maths Centre — நெல்லியடி

வினாத்தாள்கள் பெற விரும்பும் பாடசாலைகள் 14-08-1992 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விவரங்களுக்கு:

Examination Unit,

BOND Institutes,

Jaffna.

(சி-3123)



★ A/L விஞ்ஞானம் ★

சனி, ஞாயிறு வகுப்புகள்

CHEMISTRY மகாதேவா

A/L 93 General + Inorganic + Thermo

A/L 94 Basic + General

இவ் வகுப்புகளிற்கு இடநெருக்கடி காரணமாக புதிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

PHYSICS விமல்ராஜ்

12-00 — BASIC அடுக்கு MECHANICS
1-00 — LIGHT
2-00 — HEAT

CHEMISTRY சிவசோதி

2-00 — BASIC
3-00 — PHYSICAL
4-00 — ORGANIC

PHYSICS சுந்தரலிங்கம்

8-00 — BASIC
9-00 — LIGHT

ZOOLOGY கெங்காதரன்

10-00 — வன்கூடு
11-00 — பாகுபாடு

BOTANY சதீஷ்

8-00 — உயிர் இரசாயனம்
9-00 — குழியவியல்

PURE MAHTS + APP. MATHS

லஷ்மன்

7-00 — PURE. திரிகோண கணிதம்
8-00 — APP. நிலையியல்

ஆரம்பம்: 09 - 08 - 1992

BOND INSTITUTES

யாழ்ப்பாணம்.

(5284)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய வெள்ளை, மண் நிறமுடைய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48/1, 1ஆம் ஒழுங்கை [மற்றவல் லேன்], பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் [22055]

ஜெனன ஜாதகக் குறிப்பு, வியாபார ஸ்தாபனத்திற் கேற்ற பிளேன் பில் புத்தகங்கள் [பல அளவுகளிலும்] தமிழ் செயல் நூல் ஆண்டு 5, மற்றும் வாலி, பள்ளிகுதிரு முறைத் தோத்திரத் திரட்டு, கந்தபுராணம் - உரையுடன், மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ சாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (22063)

நல்ல நிலையிலுள்ள 31 H. P. லிஸ்டர் இங்கிலிஸ் என்ஜினுடன் கிறைண்டிங் மில் செற் விற்பனைக்குண்டு. ப. வைத்திலிங்கம், செங்குந்தா வீதி, [கல்வியன்காடு சந்தை முன்] வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு. (22069)

''ஓலிவ்'' ஸ்நானத்தூள் நம் முந்தையோர் கண்ட முறைமையில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை ஸ்நானப் பவுடராகும். அழுக்கை அகற்றுவதுடன் கண்ணுக்கும் குளிர்ச்சியானது. அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். மில்க்வைற். (சி-3017)

வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்க. கிரியோன் கூல்பார், நவீன சந்தை, சாவகச்சேரி. [22053]

### வாடகைக்கு தேவை

யாழ். பல்கலைக்கழக ஒரு மைல் சுற்றாடலில் சிறு குடும்பத்திற்கு வீடு அல்லது பகுதி வீடு [Annex] வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்க. இல.429, மே/பா, உதயன். [22065]

### மணமகன் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற [கிரகபாவம் 9] 5' 5'' உயரமுள்ள 27 வயது விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியைக்கு ஆசிரியர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். நகர மத்தியில் வீடும் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [22077]

கத்தோலிக்க 34 வயது ஆசிரியைக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [22078]

### மணமகள் தேவை

சொந்தமாக வியாபாரம் செய்கின்ற 29 வயது, அச்சுவினி நட்சத்திரம், மேட ராசி மணமகனுக்கு 25 வயதுக்கு மேற்படாத குடும்பப் பாங்கான மணமகள் தேவை. தொடர்பு: 855, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (5240)

### கருட புராணம்

பெரிய எழுத்து ஸ்ரீ கருட புராண வசனம் படங்களுடன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-2989]

### மாற்றுத் திருமணம்

மாற்றுத் திருமணத்தை விரும்பும் அல்லது விரும்பாத சோடிகளுக்கு யாவரும் பிரமிக்கத்தக்க முறையில் திருமணம் நிறைவேற்றப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [22079]

### O/L MATHS

தனியாகவோ, சிறு குழுவாகவோ பல வருட அனுபவமிக்க பயிற்றப்பட்ட ஆசிரியரினால் வீடுகளில் வந்து கணிதம் கற்பிக்கப்படும். திறமைச் சித்தி நிச்சயம். தொடர்பு: T. நாகேந்திரம், வசந்தம் புத்தகசாலை, இல: 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [22081]

## GCE (O/L) கணிதம்

பகுதி 1க்கான வினாக்கள் அலகு ரீதியாகத் தயாரிக்கப்பட்டவை.

இரு மாதிரி வினாத்தாள் உட்பட மொத்தம் 400 வினாக்கள்.

ஆக்கியோன்:

**திரு. த தயாளன்**

விலை ரூபா 35 - 00.

நகரிலுள்ள புத்தகசாலைகளில் கிடைக்கும். [22047]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**93 கலை, வர்த்தக வகுப்புக்கள்**

08 - 08 - 1992 காலை 8 மணி

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
அளவையியல் — திரு. சுப்பிரமணியம்
தமிழ் — திரு. குழந்தை
இந்துசமயம், இந்து நாகரிகம் — திரு. காரை சுந்தரம்பிள்ளை
புவியியல் — திரு. குணராசா
அரசியல் — திரு. ஜெயகாந்தன்
வரலாறு — திரு. சிறீதரன்

[சி-3115]

## மயானத்தில் பொலீஸ் சீருடைகள்

தங்காலைப் பகுதியில் உள்ள மயானம் ஒன்றில் இருந்து பொலீசார் பெரும் தொகையான பொலீஸ் சீருடைகளைக் கைப்பற்றி உள்ளனர். (இ)

## O/L Dec. 92

- ★ பகல்நேர
- ★ பகுதிநேர
- ★ மீட்டல் வகுப்புகள்
- ★ வாரத்தில் நான்கு நாட்களிலும்
- ★ மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன் நடைபெறுகின்றன.

**BOND INSTITUTES,**

யாழ்ப்பாணம். (5235)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை**

11 - 08 - 1992

செவ். - 10 மணி

அனுமதிகளை 10 - 08 - 1992 க்கு முன் பதிவு செய்யவும். [சி-3103]

## எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
K.K S Road, JAFFNA.

**புலமைப் பரிசில் வகுப்பு ஆண்டு-4**

தமிழ்
**குழந்தைவேல்**

அனுமதிப் பரீட்சை மூலம் மாணவர்கள் 2 பிரிவாகப் பிரிக்கப் படுவர்.

அனுமதிப் பரீட்சை
09-08-1992
[நாளை காலை 9 மணி] [22080]

## தவறிவிட்டது

அக்கரையிலிருந்து இம் மாதம் 3ஆம் திகதி இரவு கிளாலி வந்து சேர்ந்த போது, மூக்குக் கண்ணாடி மற்றும் முக்கிய ஆவணங்கள், உடுபுடைவைகள் உட்படப் பல பொருள்கள் அடங்கிய தோல் கைப்பிடி போட்ட பிளாஸ்டிக் பை ஒன்று தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கிளாலி, படகுச் சேவை பொறுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். அல்லது தபால் மூலம் உதயன் பணிமனைக்குத் தொடர்பு கொள்ளவும். வே. கந்தப்பு, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [சி-109?]

## ஈராண்டு நினைவஞ்சலி



### வைத்திலிங்கம் சிங்கவேலு

[மருதனார்மடம் எரிபொருள் நிலைய உரிமையாளர்]

தோற்றம்: 05-11-1917 மறைவு: 18-07-1990

திதி: 08-08-1992

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! ''அப்பா''
உங்கள் நினைவால் உள்ளம் வாடுகிறோம்
கந்தனின் திருவிழா காணும் இவ் வேளையிலே
கண்கள் குளமாகுதையா உம்மை நினைக்கையிலே
ஈராண்டு கடந்த போதும் உம் இனிய நினைவு
நீங்காத நிழலாக நெஞ்சத்தில் ஆடுது ''அப்பா''

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

238, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [22084]

## ஆண்டுகள் இரண்டாகின...



### அருமநாயகம் எட்வேட் பிரசன்னா

(பரியோவான் கல்லூரி மாணவன்)

தோற்றம்: 08-07-1979 மறைவு: 08-08-1990

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும், என்றும் எங்கள் நெஞ்சில் நீங்காத மலராக நிலைத்திருக்கும் எங்கள் அன்பு மகன் எட்வேட் பிரசன்னா, நீ அருள்நாதர் இயேசுக்கிறிஸ்துவின் இன்பப் பிரசன்னத்தில் மகிழ்ந்திருக்கிறாய் என்பதே எங்கள் ஆறுதல்.

அம்மா, அப்பா,
தம்பி, தங்கை.

7, மின்சாரநிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (5232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனம் ஒடியாது தடுக்க வேண்டும்

வடதமிழீழத்தில், குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டு வாழ்வா சாவா என்ற நிலையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் பயங்கரம் குறித்து நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

தென்தமிழீழத்தில் — அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கோமாரியில் — அகதி முகாம்களில் தங்கியுள்ள இளம் விதவைகள் தமது குழந்தைகளை விற்க முயல்வதாகக் கிடைத்திருக்கும் செய்தி அதிர்ச்சி தருவதாகும்.

அகதி முகாம்களில் வாழும் தமிழ்த் தாய்மார்களுக்கு தாம் பெற்றெடுத்துச் சீராட்டித் தாலாட்டி உச்சிமோந்து உவகை கொண்டு வளர்த்த குழந்தைகளை விற்றுவிடும் எண்ணம் ஏற்படுகின்றது என்றால், அவர்கள் உலகத்தையே வெறுக்கும் அளவு பாதிக்கப்பட்டு விட்டார்கள் என்பதே அர்த்தம்!

யாழ்ப்பாணத்தை - வடபகுதியை — பொறுத்தமட்டில் தமிழர்களே ஒரே தொடராக அடுத்தடுத்து தனியான சமூகமாக வாழ்கிறார்கள். ஆனால் தென்தமிழீழத்தில் — மட்டக்களப்பில், அம்பாறையில், திருகோணமலையில்— தமிழர்கள் ஏனைய சமூக மக்கள் மத்தியில் வாழவேண்டிய நிலை. தமிழர்களின் கிராமங்களை அடுத்து ஒன்றில் முஸ்லிம் கிராமம் அல்லது சிங்களக் கிராமம் என்ற ரீதியிலேயே வாழ்விட வடிவம் அமைந்துள்ளது.

அதன் காரணமாக அங்குள்ள அகதி முகாம்களில் வாழும் தமிழர்கள் புறக்கணிப்பு, பாரபட்சம் ஆகியவற்றுக்குப் பெருமளவில் உட்படுத்தப்படுவர் என்பது தெரிந்ததே.

தென் தமிழீழத்தின் தமிழர் வாழ்விடங்கள் பலவற்றில் அவர்களின் வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன. சில இடங்களில் வீடுகள் இருந்தாலும் அங்கு சென்று குடியமர்ந்தால் இராணுவத்தின் அட்டூழியங்களுக்கு ஆளாக வேண்டி வரும். இன்னும் சில இடங்களில் இராணுவத்தினர் தமது பாதுகாப்புக்காக அகதிகளை இராணுவ முகாம்களுக்கு அருகில் குடியமர்த்துகிறார்கள். வேறு சில கிராமங்களில் தமிழர்கள் தமது கிராமங்களில் சென்று குடியமர இராணுவமும் அரச அதிகாரிகளும் அனுமதிப்பதில்லை.

இவ்வாறு வெவ்வேறு நிலைப்பாடுகளின் மத்தியில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் அகதி முகாம்களிலேயே வாழ்கிறார்கள். தமிழர்கள் தங்கும் அகதி முகாம்களை அரசு மட்டுமன்றி தொண்டர் சேவை நிறுவனங்கள் கூட மாற்றாந்தாய் மனப்போக்குடனேயே நடத்துவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வட தமிழீழத்தை விட தென் தமிழீழத்தில் தமிழர்கள் உதவி அற்றவர்களாகவே வாழ்கிறார்கள். அத்தோடு இராணுவ அடக்குமுறையும் சேரும் போது மக்களில் ஒரு சாரார் வாழ்க்கையின் ஓரத்துக்கே செல்லும் சாத்தியமுண்டு. கோமாரியைச் சேர்ந்த இளம் விதவைகளின் நிலையும் அத்தகையதே.

இது தென் தமிழீழத்தைச் சேர்ந்த தமிழர்களுக்கு மட்டுமன்றி, வடதமிழீழத்தைச் சேர்ந்தவர்களுக்கும் விடுக்கப்படும் ஒரு சவாலாகக் கருதப்பட வேண்டும். கஷ்டங்கள், அவலங்கள் வரும்போது அவற்றைக் கண்டு சம்பந்தப்பட்டவர்கள் மனம் ஒடிந்து போகாமல் அவர்களுக்கு மன உறுதியும், துணிவும், உதவியும் தரவல்ல மார்க்கங்களை வகுத்துச் செயற்படுத்துவது அவசியமாகிறது.

## நாளை

யாழ்ப்பாணம், ஆக. 8

திருநெல்வேலி- காளிகோவிலடி சனசமூக நிலைய மாதர் கிராம முன்னேற்றச் சங்கம் நடத்தும் சிறுவர் பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை பரிசில் வழங்கல், மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும். [ஒ]

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 8

சாவகச்சேரி கச்சாய் வீதி ரேகா அறவழி பாலர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு ரேகா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். [ஒ-117]

## உற்சவங்கள்

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 10 ஆம் திருவிழா தினமான இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா ''அம்பிகையைச் சரணடைந்தால்'' என்னும் பொருள் பற்றி சிறப்புச்சொற்பொழிவு ஆற்றுவார். [ஒ-165]

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 8

மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோவில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார். [ஒ-117]

## காசோலை யாருடையது?

யாழ்ப்பாண நகரப்பகுதியில் கண்டெடுத்த, பெருந்தொகை பெறுமதிக்கு எழுதப்பட்ட காசோலை ஒன்றை, கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த திரு. தி. திருநாவுக்கரசு உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

அதற்குரியவர் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அ)

## விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஆ: 8

மைசூர்பருப்பு (சிவப்பு) கிலோ. 58 ரூபாவுக்கும், சர்க்கரை கிலோ 38 ரூபாவுக்கும் விற்பனை செய்யுமாறு ப. நோ. கூ. சங்கங்கள் பணிக்கப்பட்டுள்ளன.

கப்பலில் எடுத்துவரப்பட்ட இந்தப் பொருள்கள் மதிகீட்டு அடிப்படையில் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. [கூ-3]

## கோவை மகேசன் நினைவு விழா

யாழ்ப்பாணம், ஆக. 8

இளமான எழுத்தாளரும் பத்திரிகை ஆசிரியருமான கோவை மகேசனின் நினைவஞ்சலி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியசாலையில் நடைபெற உள்ளது.

திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நாளை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ்விழாவில் திருவாளர்கள் பொன். பூலோகசிங்கம், மு. வே. யோ. வாஞ்சிநாதன், சாந்தி அருந்தர்மரதினம், வி. பி. ஹரன், க. சத்தியானந்தசிவம், வைத்திய கலாநிதி திருமதி தி. கோபாலரத்தினம் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்துவர்.

தந்தை செல்வா நினைவுக் குழுவின் ஆதரவில் நடக்கவுள்ள இவ்விழாவில் திரு. சொக்கன் தலைமையில் 'தமிழெங்கள் உயிருக்கு நேர்' என்ற கவியரங்கும் நடை பெறும். (ஸ)

# வரதராஜப்பெருமாள் தாயகம் திரும்ப விருப்பம்

## அரசியலில் மீண்டும் ஈடுபடுவாராம்

கொழும்பு, ஆக. 8

தாம் தாயகம் திரும்பி, அரசியலில் தீவிரமாக ஈடுபடப்போவதாக வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இந்திய அரசு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை புதுடில்லியில் உள்ள தமது சிறப்புச்செய்தியாளர் எஸ். வெங்கட்நாராயணனை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக திரு. வரதராஜப்பெருமாள் மத்தியப் பிரதேச மாநிலத்தில் சந்தேரி கோட்டையில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் வசித்து வருகின்றார்.

தன்னை சந்திக்க வரும் மாநில அரச அதிகாரிகளிடம், தமது அரசியல் வாழ்வு சீரழிந்த நிலையில் இருப்பதாகவும், மீண்டும் இலங்கை திரும்பி தீவிர அரசியலில் ஈடுபட விரும்புவதாகவும் திரு. வரதராஜப் பெருமாள் கூறியிருக்கிறார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேரிகோட்டையில் அவரையும் அவரது மனைவி, மற்றும் நான்கு பிள்ளைகளையும் இந்திய அரசு பராமரித்து வருகின்றது.

வரதராஜப்பெருமாளின் பாதுகாப்புக்காக கடந்த ஆண்டு இந்திய அரசாங்கம் 24 லட்சம் ரூபா செலவு செய்தது. (இ-எ)

## கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 8

ஜி. சீ. ஈ. (உயர்தர) வகுப்புகள் இணைப்பது தொடர்பாக நாளை காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த கூட்டம் எதிர்வரும் புதனன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும் என கல்விப் பணிப்பாளர் தற்போது அறிவித்துள்ளார். (உ)

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மாணவர் கல்வி மேம்பாட்டுக் கழகம் ஆரம்பித்து வைக்கப்படும். [ஒ]

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 8

சாவகச்சேரி கற்குளி கந்தசாமி கோவில் பாலர் பராமரிப்பு கல்வி நிலையத்தின் மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கற்குளி கந்தசாமி கோயில் மைதானத்தில் நடைபெறும். (ஒ-117)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 8

நல்லூர் சந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் — ஆறாம் திருவிழாவான இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர் பந்தலில் (மாலையில்) — எஸ். எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் மங்கள இசை.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) — கானசுதா வாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''முருகன் திருவிளையாடல்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப் பிரசங்கம்

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு — கந்தபுராணப் படிப்பு. பிற்பகல் 3.00 மணிக்கு பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை.

(ஒ-50)

## ஆன்மீக விடுதலை ஆராதனைகள்

யாழ்ப்பாணம், ஆக. 8

மானிப்பாய், ''அசம்பிளி ஒவ் கோட்'' ஜெப நிலையத்தில் இன்றும், நாளையும் ஆன்மீக விடுதலை ஆராதனைகள் காலை 8.30 மணி தொடக்கம் பகல் 1.30 மணி வரை நடைபெறும்.

மாலை 4 மணிக்கு ஆன்மீக பாடல்கள், தேவ செய்தி இடம்பெறும்.

இந்த ஆராதனைகள் கடந்த புதன்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன. (ஸ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 8

வட பிராந்திய உப்பு நிறுவனத்தைச் சேர்ந்த சகல உப்பளங்களினதும் உயர் அதிகாரிகள், அதிகாரிகள், இலிகிதர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறும் என்று உற்பத்தி முகாமையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## யாழ். மாவட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சேர்ந்துவிட்டன.

★ பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை இம் மாதம் 16 ஆம் திகதி நடைபெறும். இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

★ ஆங்கில உதவி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை இம்மாதம் 26 ஆம் திகதி நடைபெறும். அனுமதிஅட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

★ கிராமசேவையாளர்களைத் தெரிவுசெய்வதற்கான விசேட பரீட்சை இம் மாதம் 27ஆம் திகதி நடைபெறும். வினாத் தாள்களும் வந்து சேர்ந்துவிட்டன. ஏற்கனவே இந்தப் பரீட்சையில் தோற்றுவோருக்கு வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளை அவர்கள் பயன்படுத்தலாம்.

★ ஜி. சீ. ஈ. (உயர்தர) 1991ஆம் ஆண்டு விசேட பரீட்சையில் தோற்றியோருக்கான மனைப் பொருளியல் செயன்முறைப் பரீட்சை இம்மாதம் 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும். அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தகவல்களை பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் வெளியிட்டுள்ளார். [ஒ-3]

## படையினர் சூடு

மண்டைதீவுப் பகுதியில் இருந்து நேற்று மாலை 6 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்தனர். (ஒ-15)

## துப்பாக்கி நபர் கைது

கொழும்பு, ஆக. 8

கொழும்பு மேற்கு முன்னாள் எம். பி அனுரா பஸ்தியனின் வீட்டுக்குள் புகுந்து அவரின் மகளையும் மருமகனையும் கடத்திச் செல்லப் போவதாகப் பயமுறுத்தி, பதினைந்து லட்சம் ரூபா கப்பம் கேட்ட கறுப்பு உடை அணிந்த துப்பாக்கி நபர் ஒருவரை பொலீஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்தனர்.

இப்படி கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

## சுவிஸிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பத்தை சுவிஸ் அரசு வெளியிட்டுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அகதிகளை முழுமையாகத் திருப்பியனுப்பும் நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு முன் பரீட்சார்த்த அடிப்படையில் 200 அகதிகளை திருப்பி அனுப்பும் சாத்தியம் பற்றி சிந்தித்து வருவதாகவும் —

கொழும்பில் நடத்தப்பட்ட பேச்சுகளின் பின்னரே இது பற்றி ஆலோசிக்க முடிவு செய்யப்பட்டதாகவும் சுவிஸ் குழு அறிவித்துள்ளது.

தற்போது இனச் சண்டை நடந்து கொண்டிருக்கும் யூகோஸ்லேவியா நாட்டில் இருந்து தப்பி ஓடும் அகதிகளுக்கு இடமளிப்பதற்காக தங்கள் நாடுகளில் அகதிகளாகத் தங்கியுள்ள ஆசிய நாட்டவரின் எண்ணிக்கையைக் குறைக்கும் முயற்சியில் சுவிற்சர்லாந்து உட்பட பல மேற்கு நாடுகள் ஈடுபட்டுள்ளன என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்கு நாடுகளில் சுமார் 2 லட்சம் தமிழ் அகதிகள் உள்ளனர். தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடிய அளவுக்குத் தேவையான 'ஸ்திரம்' வடக்கு, கிழக்கு பகுதியில் காணப்படுவதாக மேற்கு நாடுகள் கருதுவதாகவும் சிலவட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## விண்ணப்ப...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் நேற்றாகும். எனினும் இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் தாமதமாக யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்ததை காரணம் காட்டி, விண்ணப்ப இறுதித் தினத்தை மேலும் ஒருவாரத்துக்கு நீடிக்க அரச அதிபர் ஏற்பாடு செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

மேற்படி பதவிகளுக்காக நேற்றுவரை 4 ஆயிரம் விண்ணப்பங்களை யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (உ-3)

உ

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### குறைநீக்கி அருளையா!

வஞ்சம், பொறாமை, கோபம் வர வர நெருக்குதே
வாழ்நாளினாசை மிக, மிகப் பெருக்குதே:
எப்படிச் சொன்னாலும் நீ ஏனென்று கேளாமல்
செப்படி வித்தை செய்தல் திருவருட்காகுமோ
ஒப்புவமை யில்லாத அப்பனே நல்லைக்கந்தா -
உன்றுணை யல்லாமல் ஒருவருமில்லை ஐயா,
குறவள்ளி மணவாளா குஞ்சரி மகிழ்வோனா!
குலம்காக்கும் குமரா குறைநீக்கியருளையா!!

— திருமதி பவளம் கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

மிருசுவில்

## பத்தலோமை யோசேப்

திரு. பத்தலோமை யோசேப் அவர்களின் நல்லடக்கம் 08-08-1992 சனிக்கிழமை காலை 8 மணிக்கு மிருசுவில் புனித நிக்கலஸ் சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
திருமதி யோசேப்.

ஜீவோதயம்,
மிருசுவில்.

[5239]

## செல்லப்பா சிவசாமி

[வர்த்தகர் புங்குடுதீவு - 4]

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (08-08-92) காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சி. லோகநாதன்
[மகன் சின்னாம்பி]

இல. 4 பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[22092]

## திருமதி கமலம்மா முத்துக்குமாரசாமிக் குருக்கள்

பெருமாக்கடவை, அளவெட்டியைச் சேர்ந்த கமலம்மாள் 07-08-92 அன்று சிவபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற முத்துச்சாமிக் குருக்களது அன்பு மனைவியும், தி தேவசாமி ஐயர், தி. கந்தசாமி ஐயர், தி செந்தில்நாத ஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாலாம்பிகை, கணேஸ்வரி, இலிங்கமூர்த்தி, சரோஜா, இராஜஇராஜேஸ்வரி, உமாபதிசிவம், லலிதா, இந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ப சுவாமிநாத சர்மா [அதிபர்]. க சண்முகரத்தின சர்மா [ஸ்ரீ. வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்], இ கமலா, வி வேகானந்த சர்மா (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்], இ வெங்கடேசஐயர் (வாக்கிய பஞ்சாங்க உரிமையாளர்), இ மாணிக்கவாசகக் குருக்கள் [அளவெல்லை, விநாயகர் தேவஸ்தானம்]. வா. நவநீத சர்மா ((ரமணி] பெருமாக்கடவை, விநாயகர் தேவஸ்தானம்). ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் (08-08-92] சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று அளவெட்டி தெற்கு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வா. நவநீத சர்மா.
(மருமகன்]

பெருமாக்கடவை,
அளவெட்டி.

[4940]

## நா. நடராசா

நா. நடராசா 6 - 8 - 92 இல் காலமானார். இவர் புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற நாகநாதன் - தங்கம்மாவின் மகனும், இராசம்மா, சரசுவதி ஆகியோரின் கணவரும், கோபாலராசா [ஜேர்மனி], ஆனந்தராசா [பிரான்ஸ்], காலஞ்சென்ற வரதராசா, சற்குணராசா [பிரான்ஸ்], பற்குணராசா, உலகேஸ்வரி, அகிலாண்டநாயகி, யோகனாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகின்பநாதன் [சுவிஸ்], ஈசன் (பிரான்ஸ்], சாந்திமாலா [ஜேர்மனி], ஜெயசிறி ஆகியோரின் அன்பு மாமனாரும், விஸ்வலிங்கம் (கொழும்பு] சுந்தரம்பிள்ளை (நீர்கொழும்பு], அமிர்தம்மா, காலஞ்சென்ற இரத்தினம்மா மற்றும் கனகம்மாவின் சகோதரரும், இளையப்பா, குமரேசு, யோகம்மாவின் அன்பு மைத்துனரும் சுரன், கம்ஷா, தனுஷா, றபேஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

பூதவுடல் இன்று 8 - 8 - 92 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து சாவகச்சேரி கண்ணாடி பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ந. இளையப்பா
[மைத்துனர்]

ஹென்ஸ்மன் லேன்,
டச் றோட்,
சாவகச்சேரி.

[22076]

## சின்னத்துரை - புவனேசதாசன்

[கிளி அண்ணை]

அளவெட்டியைச் சேர்ந்த சின்னத்துரை புவனேசதாசன் காலமானார். அன்னார் செல்வமணியின் அன்புக் கணவரும் அஜித்தன், அஜந்தன் (போராளி குருவழுதி). ஆதவன், ஆரணி, அரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரிதாசன், மீனலோஷினி, பத்மலோஷினி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 8 - 8 - 92 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக அளவெட்டி தம்மனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கௌரிதாசன்
(சகோதரன்]

அளவெட்டி, வடக்கு,
அளவெட்டி.
[4939]

# மீண்டும் பஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம். ஆக. 8

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கான போக்குவரத்து நேற்று முதல் யாழ் பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமானது. கிளாலிக்கான பஸ், ஓட்டோ சேவைகளும் அங்கிருந்தே ஆரம்பமாகின.

[உ-15

## வெளிநாட்டுச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியைத் திரட்டவும், படம் பிடிக்கவும் உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் அங்கு திரண்டிருந்தனர்.

கையெழுத்து வேட்டை நடந்து கொண்டிருந்த வேளை திடீரென அங்கு வந்த ஆயுதக் கும்பல் ஒன்று தாக்குதல் வேட்டையை நடத்தியது. பத்திரிகையாளர்களைத் தாக்கியும் கமெராக்களை பறித்தும் கும்பலாக வந்த குண்டர்கள் அட்டகாசம் புரிந்தனர்

ஆயுதக் குழுவினர் பிஸ்டல்கள், கத்திகள், பொல்லுகள் சகிதம் வந்திருந்தனர். அவர்களின் தாக்குதலில் இரண்டு பத்திரிகையாளர்கள் கத்திக் குத்துக் காயங்களுக்கு ஆளாகினர். ஒரு பத்திரிகையாளருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மற்றும் பலர் காயமடைந்தனர்.

தாக்கப்பட்டவர்களில் கொழும்பில் நடைபெறவிருக்கும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியைப் படம் பிடிக்க வந்த ரொய்ட்டர் செய்திச் சேவையின் படப்பிடிப்பாளரும் ஒருவர். அமெரிக்கச் செய்தி நிறுவனமான அசோசியேட்டட் பிறஸ்ஸின் [ஏ பி] படப்பிடிப்பாளரும் தாக்குதலுக்குள்ளானார்.

வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர் தாக்கப்பட்டது மிருகத்தனமான செயல் என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு லூசியன் கருணாநாயக்கா கண்டித்தார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் திரு. அத்துலத்முதலி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் "இந்தக் கொலைக் கும்பல் சந்தேகத்துக்கு இடமின்றி ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆதரவாளர்கள் தான்" என்று தெரிவித்தார்.

(அ-எ]

## பரிசாரகர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுள்ளது.

எனினும் நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்த அனுமதி தருமாறு யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் கொழும்புத் தலைமை அலுவலகத்திடம் அரச அதிபர் மூலம் கேட்டுள்ளனர்

இதேவேளை மாகாண சபைக்கு உட்பட்டு சுகாதாரத் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட அறுபது பேர்களுக்குமான பயிற்சி எவ்வித தடையுமின்றித் தொடர்ந்து நடைபெறுகிறது.

(அ-15)

## தரைத் தாக்குத ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீவிரவாதத்துக்கு எதிராக சண்டையிடுவதற்குத் தேவையான ஆயுதங்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு இந்த நாடுகள் தான் விற்பனை செய்து வருகின்றன என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நிலைமையை மிக விரைவில் பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர என்ன உதவிகள் செய்யமுடியுமோ அவை அனைத்தையும் வழங்கத் தயாராக இருப்பதாக அரசாங்கம் உறுதி அளித்திருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ]

# முல்லை. முகாம் கொள்ளை: 9 படையினரும் பிணையில்

வவுனியா, ஆக. 8

முல்லைத்தீவு இராணுவ முகாமில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு மக்கள் வங்கி அடகு நகைகள், ரொக்கப் பணம் ஆகியவை கொள்ளையிடப்பட்டது தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 9 இராணுவத்தினரும் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நீதிவான் இவர்களை பிணையில் அனுமதித்து, வழக்கை முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு மாற்றியுள்ளார்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த மூன்று இராணுவ அதிகாரிகள் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

[ஒ-3]

# இடம்பெயர்ந்த மாணவருக்கு மன்னாரில் இலவச வகுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 8

மன்னார் மாவட்டம் பண்டிவிரிச்சானில் வசதி குறைந்த மற்றும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட மாணவர் அமைப்பால் இலவச வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ் வகுப்புகளுக்கு முருங்கன், அடம்பன் ஆகிய பிரதேசங்களில் இருந்தும் ஆசிரியர்கள் வந்து ஆர்வமுடன் கற்பிக்கின்றனர்.

இதே வேளை—

முருங்கன், அடம்பன், முழங்காவில் ஆகிய பிரதேசங்களிலும் இவ் வகுப்புகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கிழக்கில் எதிர்நடவடிக்கை: அமைச்சர் ரணில் தகவல்

கொழும்பு, ஆக 8


விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் கவனத்தை திசை திருப்பவே கிழக்கில் தாக்குதலை தொடர்வதாகவும்—

இந்த நிலைமையைச் சமாளிக்க எதிர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும்—

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா வியாழன் நடந்த வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில்: | ஆண்டவன் மடியில்: |
| --- | --- |
| 29 | 08 |
| — | — |
| 10 | 08 |
| — | — |
| 1957 | 1990 |



## பேட்டி அன்ரன் எதிர்வீரசிங்கி, B. Sc.

[முன்னாள் ஆசிரியர், யாழ். சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய்]

வல்லரக்கர் வான்சகடை
வனப்பான உன்உடலை
சொல்லொண்ணாத் துயர்நிலையாய்
துகள்துகளாய் ஆக்கியதோ !
என்செய்வோம் உன்பிரிவு
ஈராண்டு சென்றாலும்
அன்புக்குன் நிலைக்களன்தான்
அளப்பரிய கதைசொல்லும் !

பிரிவால் துயருறும்
மனைவி, மகன்.

390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[20095]

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயமாலினி புஸ்பராசா

சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அளவெட்டி வடக்கை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி ஜெயமாலினி புஸ்பராசா கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. புஸ்பராசாவின் அன்பு மனைவியும், சஞ்சி, கிஷோக்குமார், டீன்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற எஸ். கந்தசாமி நல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும், ஜெயரஞ்சன், மனோரஞ்சினி ராகினி, ஜெயமோகன், ரோகினி, ஜெயகாந்தன், நளினி, ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி புனிதவதி நவரட்ணம்
(பெறாமகள்]

மாவத்தை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(4938]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org